பாடம் 7

# பரிசுத்தாவியானவர்

இயேசு தங்களை விட்டுச் செல்வதை சீஷர்கள் அறிந்திருந்தனர். அதனை குறித்து அவர் அவர்களிடத்தில் சொல்லியிருந்தார். முதலில் அது ஓர் நற்செய்தியாய் காணப்படாமல் அவர்கள் இருதயங்கள் கலக்கமுற்றிருந்தது. அவர்கள் இயேசுவை நேசித்து அவருடன் மூன்று வருடங்கள் நடந்தனர். அவரின்றி எங்கனம் அவர்கள் வாழ முடியும்.

அவர்களுடைய இருதய நிலையை அறிந்த அவர், அவர்களை விட்டு தமது பிதாவண்டை செல்வது அவர்களுக்கு சிறந்தது என கண்டார். அவர்களை ஒருபோதும் தனிமையில் விடாதபடி பரிசுத்த ஆவியானவரை பிதாவானவர் அனுப்புவர். (திருத்துவத்தில் ஒருவர். பாடம் 2)

தேவனுடைய ஆவியானவரை ஒரு குறிப்பிட்ட தேசமோ அல்லது குழுவினரோ மட்டும் அறிந்து கொள்ளுவதன்றி பூலோகமனைத்தும் அறிந்து கொள்வர். பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு, சுமார் 15 நாட்டினர் கூடியிருக்கையில் பிரசங்கித்தான். அப்போஸ்தலர் 2:16-17ல் அவன் என்ன போதித்தான் என்று பார்க்கிறோம்.

தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டப்படியே; ''கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்''

ஆரும் பாடத்தில் இரட்சிப்பை குறித்து நாம் கற்றுகொண்டோம். பரிசுத்தாவியானவரின் கிரியையினால் நாம் இரட்சிக்கப்பட்டோம் என நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?



நமது வாழ்வில் பரிசுத்தாவியானவரும் அவருடைய கிரியையும் எங்கனம் என நாம் கற்று கொள்ளுவோம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

பரிசுத்தாவியானவரின் ஆள்தத்துவம்
பரிசுத்தாவியானவரின் கிரியைகள்

## இந்த பாடம் உங்களுக்கு செய்யும் உதவி

* பரிசுத்தாவியானவரின் ஆள்த்தத்துவத்தை விவரித்தல்
* இரட்சிப்பில் பரிசுத்தாவியானவரின் கிரியை விவரித்தல்
* உனது வாழ்க்கையில் பரிசுத்தாவியானவரின் கரியையை அறிந்து கொள்ளுதல்.

## பரிசுத்தாவியானவரின் ஆள்த் தத்துவம்

**நோக்கம் 1.** *பரிசுத்தாவியானவர் யார் என்றும் அவரது பல குணதிசயங்களில் ஐந்திணை யாவது சுட்டிக் காட்டுதல்.*

பரிசுத்தாவியானவர் தேவனாக இருக்கிறார்' திருத்துவத் தில் அவர் மூன்றாவதாக காணப்படுகிறார். பிதாவை போன் றும் குமாரனை போன்றும் அவரும் பலப்பெயர்களை உடை யவராயிருக்கிறார். அவைகளுள் சில: தேவனுடைய ஆவி, சத்தியத்தின் ஆவி, தேற்றரவாளன் என்பவைகளாகும். மத்தேயு 28:19-ல் மூவரையும் காண்கிறோம். ''நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ் நானங்கொடுங்கள்.''

பரிசுத்தாவியானவர் பிதாவை போலவே நித்தியர், சர்வ வல்லவர், சர்வ ஞானி, எங்கும் நிறைந்தவர். அவர் பிதாவோடும், குமாரனோடும் சேர்ந்து பணி செய்வது மட்டு மன்றி அவர் சிருஷ்டிப்பிலும் அவர்களோடு கூட இருந்தார். அதற்கு ஆதாரமான சில வசனங்களை கவனிப்போம்.

''நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்.'' (எபிரேயர் 9:14)

''ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங் களையும் அறிந்திருக்கிறார்'' (1 கொரிந்தியர் 2:10)

## பரிசுத்தாவியானவரின் கிரியைகள்

நோக்கம் 2. *வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள பரிசுத்த ஆவியானவரின் ஆறு கிரியைகளை அறிந்து கொள்ளுதல்.*

நமது இரட்சிப்பில் பரிசுத்தாவியானவர் ஓர் முக்கிய பங் கை வகிக்கின்றார். நமது பாவங்களை நமக்கு எடுத்துணர்த்தி, இயேசுவை நமது சொந்த இரட்சகராய் எற்றுக் கொள்ள அவர் உதவி புரிகின்றார். நமது வாழ்க்கையை அவர் மாற்றுகின்றார்.

அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்துணர்த்துவார்.(யோவான் 16:8) எல்லா விசுவாசிகளுக்குள்ளும் பரிசுத்தாவியானவர் வாசஞ்செய்கிருர். மனமாற்றம் ஏற்படுகையில் அவர் இருதயத்திற்குள் வருகிருர் ரோமர். 8:9-ல் ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல''.

அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெருமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிருர். (ரோமர் 8:15–16)

நமக்குள்ளே வாசஞ்செய்கிற பரிசுத்தாவியானவர், நமது மனந்திரும்புதலிக்கு பின் நம்மை நிரப்புகிற அனுபவத்திற்கும் நடத்துகிருர். அவ்வனுபவத்தை பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல் என்று அழைக்கிறோம். எல்லா விசுவாசிகளும் இவ்வனுபவத்தை பெற்றவர்களல்லர், ஆயினும் எல்லா விசுவாசிகளும் இவ்வனுபவத்தை பெற்றிருக்க வேண்டுமென தேவன் விரும்புகிருர்.

அவர் (இயேசு) தேவனுடைய வலதுகரத்தினலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தாவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினர். (அப்போஸ்தலர் 2:33)

பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீகள். (அப்போஸ்தலர் 2:38)

பரிசுத்தாவியானவர் நமது தேற்றரவாளனாகவும், உதவியாளராகவும் காணப்படுகிறார். அவர் நம்மை உபதேசித்து, அன்பின் ஐக்கியத்தை தந்து, சத்தியத்திற்கு நேராய் நடத்துகிறார். நமக்கு அருளும்படியாக அவரிடத்தில் சந்தோஷம், சமாதானம், சாந்தம், தாழ்மை, இச்சையடக்கம் போன்ற கனிகளையுடையவராயிருக்கின்றார் (கலாத்தியர் 5:22). மட்டுமின்றி நாம் தேவனுக்கும் மனுஷர்களுக்கும் ஊழியஞ்செய்யும் படியாக ஆவியின் வரங்களையும் உடையவராயிருக்கின்றார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1 சரியான சொற்றொடருக்கு முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

a) ஒவ்வொரு விசுவாசிகளிலும் பரிசுத்தாவியானவர் வாசஞ் செய்கிறார்.

b) பரிசுத்தாவியானவர் நம்மை இரட்சிப்புக்கு நேராய் நடத்துகிறார்.

c) மனந்திரும்புதலும் பரிசுத்தாவி அபிஷேகமும் ஒன்றே.

d) நாம் தேவ பிள்ளைகளென்று பரிசுத்தாவியானவர் சாட்சி கொடுக்கிறார்.

2 பரிசுத்தாவியானவர் அருளும் கனிகளை குறிப்பிடவும்

a) ச ..............................

b) ச ..............................

c) சா ..............................

d) தா ..............................

e) இ ..............................